1981 ஆகஸ்ட் 22]

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) வேளாண் தொழிலாளர் நியாய ஊதிய (திருத்த) சட்ட முன் வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981-ம் ஆண்டு வேளாண் தொழிலாளர் நியாய ஊதிய (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. ந. குலசேகர பாண்டியன்) : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. அறிவிப்புகள்.

(அ) வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன் வடிவு, 1981 (ஆ, இ).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. ந. குலசேகர பாண்டியன்) : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.